ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2024 பெப்புருவரி 15

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை அறிக்கை - 2024 பெப்புருவரியினை வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இன்று (2024.02.15) நாணயக் கொள்கை அறிக்கை - 2024 பெப்புருவரியினை வெளியிட்டது. இவ்வறிக்கையின் உள்ளடக்கமானது முக்கியமாக 2024 சனவரி மாத மீளாய்வின் போது நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை உருவாக்குவதில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பொருளாதாரம் தொடர்பில் குறிப்பாக, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக முன்னோக்கிய பார்வையிலமைந்த நோக்குகளை வழங்கும் பொருட்டு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இரண்டாவது நாணயக் கொள்கை அறிக்கையாக இது காணப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய துறைகளின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன மீதான எறிவுகளிற்கான இடர்நேர்வுகளின் மதிப்பீடொன்றினை வழங்குவதனையும் அறிக்கை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வறிக்கையினூடாக, மத்திய வங்கியின் அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கான நியாயபூர்வதன்மையினை தொடர்பூட்டுவதனூடாக அதன் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் மேம்படுத்துவதற்கு மத்திய வங்கி முயற்சிக்கின்றது.

**நாணயக் கொள்கை அறிக்கை - 2024 பெப்புருவரியின் முக்கிய சிறப்புக்கூறுகள்**

- இலங்கை 2023இல் பணவீக்கத்தினை ஒற்றை இலக்க மட்டங்களிற்கு வெற்றிகரமாகக் குறைத்ததுடன் 2022இல் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றில் மிகவும் உயர்ந்தளவிலான பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்திய பின்னர் விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுத்தது
- சீராக்கக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2023இல் பொருளாதார நடவடிக்கைகள் உத்வேகத்தினைப் படிப்படியாக மீளப்பெற்றுக்கொண்டன
- பணவீக்கம் குறைவடைந்தமை மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்ட வேளையில் வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் தளர்வடைந்தமையினால் 2023 யூன் தொடக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டது
- முக்கியமாக அண்மைய வரித் திருத்தங்கள் மற்றும் நிரம்பல் பக்க இடையூறுகள் என்பவற்றின் காரணமாக பணவீக்கம் அண்மைய காலத்தில் இலக்கிலிருந்து விலகலாமெனினும் இத்தகைய தாக்கம் குறுகிய காலத்திலானதாக அமையக்கூடும்.
- பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை (ஆண்டிற்கு ஆண்டு) அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது
- ஆண்டிற்குரிய பொருளாதார வளர்ச்சியானது 2024இல் நேர்க்கணியமாகத் திரும்பலடைந்து, நடுத்தர காலத்தில் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினைப் படிப்படியாக அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது

**நாணயக் கொள்கை அறிக்கை – 2024 பெப்புருவரியின் சுருக்க அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது:**

2022இல் வரலாற்றிலேயே மிகவும் உயர்ந்த மட்டங்களில் காணப்பட்ட பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டங்களுக்குக் கீழ்நோக்கிக் கொண்டுவரப்பட்டு 2023இல் மீட்டெடுக்கப்பட்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை நோக்கிய பாதையில் இலங்கை பொருளாதாரம் முன்னேறியது. மேலும், நிச்சயமற்றதன்மைகள் மற்றும் சவாலான நிலைமைகளுக்கு மத்தியில், நாட்டின் வரலாற்றிலேயே மிக மோசமான நெருக்கடியினைத் தொடர்ந்து நாணயக் கொள்கை மற்றும் நாணய நிலைமைகளின் படிப்படியான தளர்த்தல் மற்றும் வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சி என்பவையினால் ஆதரவளிக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கை படிப்படியாக மீளத்தொடங்கியது.


சீராக்கக்கூடிய பேரண்டப்பொருளாதார கொள்கைகள் மற்றும் தேவையான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பவை உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை எய்துவதற்கு காரணமாக இருந்து திரண்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை பலப்படுத்தியது. 2023இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சடுதியான பணவீக்க வீழ்ச்சியினைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்படும் ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது உச்சத்தை எட்டிய பின்னரான ஓர் வருடத்திற்குள்ளேயே ஒற்றை இலக்க மட்டங்களுக்கு மிதமடைந்ததுடன் 2023 செத்தெம்பரில் 1.3 சதவீதமான குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நிரம்பல்சார் காரணிகள் மற்றும் சாதகமான தளத்தின் மறைந்து செல்லும் தாக்கம் என்பன காரணமாக 2023 இறுதியில் பணவீக்கம் ஏறத்தாழ 4.0 சதவீதத்திற்கு ஓரளவிற்கு விரைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலான மையப் பணவீக்கமும் 2023 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு மிதமடைந்தமையானது மெதுவடைந்த அடிப்படைக் கேள்வி அழுத்தங்களை பிரதிபலித்தது.

அதேவேளையில், அரசாங்கம் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் நீண்டகால நோக்குடனான பொருளாதார கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலுடன் திரண்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் மெதுவான திரும்புகையினால் பயன்பெற்று 2023இல் உள்நாட்டு பொருளாதாரம் திடமானதொரு மீட்சியை பதிவுசெய்தது. மேலும், இவ்வகையான கொள்கைகளின் பின்பற்றலினூடாக பொருளாதாரத்தை மீட்பதற்கான உறுதியான கடப்பாடானது முதலீட்டாளர்களின் மனோபாவங்களை மேம்படுத்துவதற்கு உதவியது. இதற்கேற்ப, தொடர்ச்சியான ஆறு காலாண்டுச் சுருக்கத்திற்குப் பின்னர் நிச்சயமற்றதன்மைகளின் மறைவு மற்றும் சகல பேரண்டப்பொருளாதாரத் துறைகளிலும் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் என்பவற்றுடன் 2023இன் மூன்றாம் காலாண்டில் பொருளாதாரம் தனது நடவடிக்கையில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது. நாணயக் கொள்கையின் தளர்த்தல் மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கையின் மேம்பாடு என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு 2023இன் நடுப்பகுதியிலிருந்து தனியார் துறைக்கான கொடுகடனில் விரிவாக்கமொன்று அவதானிக்கப்பட்டதுடன் இந்த உத்வேகம் எதிர்வரும் காலப்பகுதியிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் மிதமடைந்த வேளையில் பணவீக்கம் தாழ்வாக இருந்து பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்ந்து உறுதிநிலைப்படுத்தப்பட்டதுடன் பொருளாதாரம் ஓர் உறுதியான நிலையை எய்தியமையினால் மத்திய வங்கியானது 2023இன் பின்னரைப் பகுதியில் தொடர்ந்தும் நாணயக் கொள்கையை தளர்த்தியது. சடுதியான பணவீக்க வீழ்ச்சி வழிமுறையினைத் தொடர்ந்து தற்போதைய பணவீக்கமானது பணவீக்க இலக்கிற்கு அண்மையிலுள்ளது. எனினும், 2024 இறுதியளவில் இலக்கை நோக்கி மீளத் திரும்புவதற்கு முன்னர் முக்கியமாக 2024 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்கான திருத்தங்களினால் பணவீக்கம் இலக்கிலிருந்து விலகுமென எறிவுகள் குறிப்பிடுகின்றன. பணவீக்கத்தின் இந்த அதிகரிப்பு குறுகிய காலத்திற்கே இருக்குமென எதிர்பார்க்கப்படுவதனால் நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டமான 5 சதவீதத்தில் பணவீக்கத்தை பேணுவதற்கு இது பாரியளவிலானதோர் அச்சுறுத்தலாக இருக்காது. மொத்தத்தில், பெருமளவில் நிரம்பல் காரணிகளால் அண்மைக்கால பணவீக்கத்திற்கான இடர்நேர்வுகள் மேல்நோக்கி சாய்ந்துள்ள அதே

வேளையில் நடுத்தர கால பணவீக்க எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் சமநிலையாக உள்ளன. குறுங்காலத்தில் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் தனது உள்ளாற்றலை நோக்கி படிப்படியாக மீட்சிபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி மீட்சியை பாதிக்கும் உலகளாவிய ரீதியிலான பாதகமான அபிவிருத்திகள், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் வெளிச்செல்லலினால் உற்பத்தித்திறனின் இழப்பு மற்றும் வளர்ச்சிக்கான கட்டமைப்பு ரீதியான தடங்கல்கள் என்பவைக்கு பொருளாதார நடவடிக்கை எய்துநிலையுடன் காணப்படுவதனால் அண்மைக்காலம் மற்றும் நடுத்தரகாலம் ஆகிய இரண்டிலும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் கீழ்நோக்கி சாய்ந்துள்ளன.

**வரைபடம் 01: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

***குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல***
உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற்கொள்கையில், தற்போதைய எறிவுகளுடன் தொடர்பான இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். அடிப்படையான ஊகங்களிலும் மதிப்பீடுகளிலும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டால் இது எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கம் விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளுடன் வீச்சு வரைபடங்களும் ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். வீச்சு வரைபடத்தில் 2022இன் 4ஆம் காலாண்டு வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013 = 100, பருவவாரியாக திருத்தப்பட்டது) அடிப்படையானது. அதே வேளையில், இந்த காலப்பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021 = 100, பருவவாரியாக திருத்தப்பட்டது) அடிப்படையானது. இந்த எறிவுகள் 2024 சனவரி நாணயக்கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த சகல தரவுகளை அடிப்படையாகக்கொண்டவை.

*இணையவழி வெளியீடான நாணயக் கொள்கை அறிக்கை என்பது மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் [https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/நாணயக்-கொள்கை-அறிக்கை/நாணயக்-கொள்கை-அறிக்கை-2024-பெப்புருவரி](https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/நாணயக்-கொள்கை-அறிக்கை/நாணயக்-கொள்கை-அறிக்கை-2024-பெப்புருவரி) இல் கிடைக்கப்பெறும்.*